2005 மார்ச் 30]

வாய்ந்தது. இந்த நிலையில் எல்லியபுரம், லாவிதம்பட்டி, கார்கூர், பல்லளக்குப்பம், செண்டத்தூர், எம்.இ. குப்பம், நாகதோப்பு, நல்லியம்பட்டு, கைலாசகிரி ஆகிய பத்துக்கும் மேற்பட்ட கிராம மக்கள் இந்த மருத்துவமனையில்தான் சிகிச்சை பெற்று வருகின்றனர். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, பொதுமக்களின் தேவையைக் கருதி மேல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்படுவதற்கு, ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய நான் விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் 2001–லிருந்து 2005 வரையில் கிட்டத்தட்ட, 104 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அந்த 104 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் தரம் உயர்த்தப்பட்டது மட்டுமல்லாமல், ஒன்றியத்திற்கு ஒன்று என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே பார்க்கும்போது, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, வருகின்ற நிதியாண்டிலே, அவருடைய மருத்துவமனையைத் தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 246, திரு. ப. அரசன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

246—

கைமுறை காகித ஆலை

***46099—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோயில் நகரில் கதர் வாரியம் மூலம் கைமுறை காகித ஆலை தொடங்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[2005 மார்ச் 30

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய அறந்தாங்கி தொகுதியிலே ஆவுடையார்கோயில் மிகவும் வறண்ட பகுதி, பிற்படுத்தப்பட்ட பகுதி. அந்தப் பகுதியிலே இளைஞர்கள் படித்துவிட்டு எந்த வேலை வாய்ப்புமின்றி இருக்கிறார்கள். இந்தக் கைமுறை காகித அலகு தொடங்குவதற்கு பெரிய அளவு நிதி ஒன்றும் தேவைப்படாது. சிறிய அளவு நிதியே அதற்குப் போதும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதியிலே கைமுறை காகித அலகு ஒன்று தொடங்குவதற்கு மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டில் 19 கைமுறை காகித அலகுகள் தொடங்கப்பட்டு, அதிலே விடாரம், செண்பகப்புதூர், கோவளம், உதகை இந்த நான்கு இடங்களிலே மட்டும்தான் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மீதி இருக்கிற 15 இடங்களிலேயே தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்த காரணத்தால், தொடர்ந்து நடத்த முடியாமல் போய் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பின்தங்கிய பகுதி என்று குறிப்பிடுகிற காரணத்தால், கைமுறை காகித அலகு உற்பத்தி செய்யக்கூடிய தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஒன்றைப் புதிதாக ஏற்படுத்தி, அதன்மூலம் இதுபோன்ற கைமுறை காகித அலகு செய்யக்கூடிய முறையை, அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு எடுத்துத் தெரிவித்து அந்தத் தொழில் செய்ய முன்வருவார்களேயானால் நேரடியாக வாரியம் கடன் வழங்க இயலாது, வங்கிகளுக்கு அனுப்பி வைத்து சிபாரிசின் அடிப்படையிலே அவர்களுக்கு உதவி செய்வதற்குத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 247, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.